# மலேசியாவில் குடும்பங்களின் வருமானம் அதிகரித்து வருகிறது

## – மலேசிய புள்ளிவிவர இலாகாவின் ஆய்வு காட்டுகிறது




(எஸ்.ஜீவராஜா/ஆர்.குணா)

புத்ராஜெயா, ஜூலை 29-

பொருளாதார துறை அமைச்சின் கீழான மலேசிய புள்ளிவிவர இலாகா அதன் ஆய்வுகள் மற்றும் புள்ளி விவரங்கள் சேகரிப்பு மீதிலான 33 அறிக்கைகளை நேற்று வெளியிட்டது. இவை கடந்த 2022 ஆம் ஆண்டுக்கான குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவினம் அடிப்படையிலானவை என்பது குறிப்பிடத்தக்கது. பொருளாதார அமைச்சர் ரபிசி ரம்லி தலைமையில் இதன் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

அந்த 33 அறிக்கைகளில்: 2022 மலேசியாவின் குடும்ப வருமான ஆய்வு அறிக்கை; 2022 மாநில, நிர்வாக மாவட்ட குடும்பங்கள் செலவினம் மீதிலான 14 அறிக்கைகள்; 2022 மலேசிய குடும்பங்களின் செலவின ஆய்வறிக்கை; 2022 மாநில மற்றும் நிர்வாக மாவட்ட குடும்பங்களின் செலவினம் மீதிலான 14 அறிக்கைகள் ஆகியன அடங்கும்.

இவற்றுடன் முதல் முறையாக, 2022 ஆம் ஆண்டுக்கான மலேசியாவின் வறுமை அறிக்கை; 2022 மலேசிய வருமான ஏற்றத்தாழ்வு அறிக்கை; 2022 ஆம் ஆண்டுக்கான வருமான செலவின வறுமை ஏற்றத்தாழ்வின் சுருக்கம் ஆகிய மற்ற அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

குடும்ப வருமான ஆய்வு அறிக்கையானது ஒவ்வொரு குடும்பமும் பெற்றுள்ள வருமானங்கள் பற்றிய ஆய்வாகும். அதே சமயம், குடும்ப செலவின ஆய்வு அறிக்கையானது மலேசியாவில் ஒவ்வொரு குடும்பத்தின் செலவு முறைகள் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கையாகும் என மலேசிய தலைமை புள்ளிவிவர நிபுணர் டத்தோஸ்ரீ டாக்டர் முகமட் உசிர் மஹிதின் விவரித்தார்.

### குடும்பங்களின் வருமானம்

மலேசியர்களின் நடுத்தர குடும்ப வருமானம் 2022 இல் 2.5 விழுக்காடு 6,338 வெள்ளிக்கு 2.5 விழுக்காடு மிதமாக அதிகரித்தது. அதே ஆண்டில் சராசரி குடும்ப வருமானம் 8,479 வெள்ளிக்கு 2.4 விழுக்காடு அதிகரித்தது. இது குடும்பங்களின் வருமான, செலவின ஆய்வின் வழியாகத் தெரிய வந்துள்ளது என அவர் கூறினார்.

நாட்டின் ஆறு மாநிலங்கள் தேசிய அளவீட்டிற்கு மேலாக சராசரி வருமானத்தை பதிவு செய்தன. அவை: கோலாலம்பூர் (10,234 வெள்ளி); புத்ராஜெயா (10,056 வெள்ளி); சிலாங்கூர் (9,983 வெள்ளி); லாபுவான் (6,904 வெள்ளி); ஜொகூர் (6,879 வெள்ளி); பினாங்கு (6,502 வெள்ளி) ஆகியனவாகும்.

வருமான மதிப்பானது 3.8 பேரின் சராசரி குடும்ப அளவை கவனத்தில் கொள்கிறது. இதில் வருமானம் பெறுபவர்கள் சராசரி 1.8 பேர் ஆவர். சம்பளம் வாங்கும் தரப்பினர், சுயமாக சம்பாதிக்கும் தரப்பினர், முதலீடுகள் வழி வருமானம் பெறும் தரப்பினர், மற்ற பரிமாற்றங்கள் வழி வருமானம் பெறும் தரப்பினர் ஆகியோர் இதில் அடங்குவர் என்று டாக்டர் முகமட் உசிர் தெரிவித்தார்.

கடந்த 2019 முதல் 2022 வரையிலான காலகட்டத்திற்கு ஆண்டுக்கு 6.5 விழுக்காடு என்ற உயரிய சராசரி வருமான வளர்ச்சியை சிலாங்கூர் பதிவு செய்தது. அதே வேளை, கோலாலம்பூர் அதே காலகட்டத்தில் அதன் மாதாந்திர மொத்த சராசரி வருமானத்தில் 1.0 விழுக்காடு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

தேசிய அளவீட்டை விட குறைவான சராசரி வருமானத்தை பதிவு செய்த மற்ற மாநிலங்களில் கிளந்தான் (3,614 வெள்ளி); கெடா (4,402 வெள்ளி); பேரா (4,494 வெள்ளி); சபா (4,577 வெள்ளி); பெர்லிஸ் (4,713 வெள்ளி); பகாங் (4,753 வெள்ளி); சரவா (4,097 வெள்ளி) ஆகியன அடங்கும் என்று அவர் மேலும் விவரித்தார்.

நெகிரி செம்பிலான், திரெங்கானு, மலாக்கா ஆகிய மாநிலங்கள் முறையே 5,226 வெள்ளி, 5,878 வெள்ளி, 6,210 வெள்ளி என்ற சராசரி குடும்ப வருமானத்தைக் கொண்டுள்ளன.

மாவட்ட ரீதியில் குறைவான சராசரி வருமானம் பெறும் 10 மாவட்டங்களை புள்ளிவிவர இலாகா பட்டியலிட்டுள்ளது. அவற்றில் சபாவில் மூன்று, சரவாவில் நான்கு, கிளந்தானில் மூன்று உள்ளன. சபா, பித்தாஸ் மாவட்டம் ஆகக்குறைவாக 2,329 வெள்ளி சராசரி வருமானத்தை பதிவிட்டுள்ள பகுதியாகும்.

மாவட்ட ரீதியில் அதிகமான வருமானத்தை பெறும் முன்னணி மாவட்டமாக சிலாங்கூர், சிப்பாங் விளங்குகிறது. இதன் சராசரி வருமான அளவு 12,608 வெள்ளியாகும்.

மாதாந்திர சராசரி மொத்த குடும்ப வருமானத்தை எடுத்துக்கொண்டால் 13,473 வெள்ளியுடன் புத்ராஜெயா முன்னணி வகிக்கின்றது. அதையடுத்து கோலாலம்பூர் (13,325 வெள்ளி); சிலாங்கூர் (12,233 வெள்ளி); ஜொகூர் (8,517 வெள்ளி) ஆகியன பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்துமே தேசிய சராசரி அளவான 8,479 வெள்ளியை விட அதிகமாகும்.

சராசரி மாதாந்திர செலவழிக்கக்கூடிய வருமானமும் கடந்த ஆண்டு 7,111 வெள்ளிக்கு 1.7 விழுக்காடு அதிகரித்தது. 2019 இல் இதன் அளவு 6,764 ஆக இருந்தது.

### வருமான பகிர்ந்தளிப்பு

வருமான பகிர்ந்தளிப்பு முறையைப் பொறுத்த வரையில், 31 லட்சத்து 60 ஆயிரம் பி40 ஏழைக் குடும்பங்களின் வருமான வரம்பு 5,249 வெள்ளியாகும். அதே சமயம் எம்40 நடுத்தர வருமான பிரிவினர் 5,250 வெள்ளி மற்றும் 11,819 வெள்ளிக்கிடையே சராசரி வருமானத்தை பதிவு செய்தனர்.

முதல் 20 என்ற பட்டியலில் உள்ள டி20 பிரிவினரில் 11,820 வெள்ளிக்கும் மேலான வருமானம் பெறும் 15 லட்சத்து 80 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெற்றுள்ளன.

மொத்த குடும்ப வருமான விநியோகிப்பில் 46.3 விழுக்காட்டினர் டி20 பிரிவினராக உள்ளனர். எனினும், 2019 லிருந்த 46.8 விழுக்காட்டிலிருந்து இது சற்று குறைவாகும். அதே வேளை இதில் எம்40 பிரிவினர் 37.6 விழுக்காட்டினராகவும் மொத்த வருமானத்தின் 16.1 விழுக்காடாக மட்டுமே பி40 பிரிவினர் உள்ளனர் என்றும் டாக்டர் உசிர் தமது விளக்கமளிப்பில் கூறினார். நாட்டில் வருமான ஏற்றத்தாழ்வு இடைவெளி நிலை, 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல் 0.3 விழுக்காடாக குறைந்துள்ளது என ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன.

மக்கள் மத்தியில் வருமானம் அல்லது சொத்துகளின் மதிப்பீட்டிற்காக ஜினி கோஎபிசண்ட் எனும் அளவுகோல் முறை பயன்படுத்தப்படுகிறது. ஏற்றத்தாழ்வு இதன் வழி கண்டறியப்படுகிறது. நகர்ப்புற பகுதிகளில் இந்த ஏற்றத்தாழ்வு 2019 இல் 0.398 லிருந்து கடந்த ஆண்டு 0.393 ஆகக் குறைந்தது என்பதை இதன் ஆய்வு காட்டுகிறது. கிராமப்பகுதிகளிலும் இந்த ஏற்றத்தாழ்வு 0.367 லிருந்து 0.351 ஆகக் குறைந்தது.

இன ரீதியாகவும் இந்த ஏற்றத்தாழ்வு குறைந்திருப்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. பூமிபுத்ராக்களிடையே இதன் அளவு 0.389 லிருந்து 0.387 ஆகவும், சீனர்கள் 0.417 லிருந்து 0.412 ஆகவும் இந்தியர்கள் மத்தியில் 0.411 லிருந்து 0.406 ஆகவும் இது குறைந்துள்ளது. எனினும், மலேசியாவில் குடும்ப வருமானத்தில் அதிகரிப்பு இருந்த போதிலும் பல்வேறு இனங்களுக்கிடையே வருமான இடைவெளி இன்னும் குறிப்பிடத்தக்க அளவு உள்ளது என அவர் தெரிவித்தார்.

சீன மற்றும் பூமிபுத்ரா பிரிவினருக்கு இடையே வருமான இடைவெளி 2022 இல் 1:0.71 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை 2019 இல் 1:0.72 ஆக இருந்தது. அதே சமயம் சீனர்கள் மற்றும் இந்தியர்களுக்கிடையிலான வருமான இடைவெளியை எடுத்துக்கொண்டால் 2022 இல் இதன் அளவு 1:0.85 ஆக இருந்தது. இதே எண்ணிக்கை 2019 இல் 1:0.83 ஆகப் பதிவாகியிருந்தது. கடந்த ஆண்டுகளில் ஓரளவுக்கு இது மேம்பாடு கண்டதை காண முடிகிறது. இதனிடையே, வறுமைக் கோட்டு வருமானத்தின் மதிப்பு 2019 லிருந்த 2,208 வெள்ளியிலிருந்து 2022 இல் 2,589 ஆக அதிகரித்தது. உணவுகளின் வறுமைக் கோட்டு வருமான மதிப்பு 2019 இல் இருந்த 1,169 வெள்ளியிலிருந்து 2022 இல் 1,198 வெள்ளிக்கு 29 வெள்ளி அதிகரித்தது.

உலகளாவிய நிலையில் கோவிட்-19 தொற்றுப்பரவல் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தி வறுமை நிலையை மோசமாக்கியிருந்தாலும் கூட, 2022 இல் முழுமையான வறுமை சம்பவங்கள் 2021 இல் இருந்த 8.2 விழுக்காட்டிலிருந்து 6.2 விழுக்காட்டிற்கு குறைந்தது என்பதையும் டாக்டர் உசிர் சுட்டிக்காட்டினார்.

